பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

[மலர்: 19] சென்னை: மார்கழி 1 (16—12—71) வியாழன் வெளியூர்: மார்கழி 2 (17—12—71) வெள்ளி [இதழ்: 154

எதிரியின் இழப்பு

இதுவரை, கடந்த 13 நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு:—

விமானங்கள்	86
டாங்கிகள்	186
போர்க் கப்பல்கள்	4
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	16
இதர படகுகள்	12

இந்தியாவுக்கு ஏற்பட்ட இழப்பு 61 விமானங்கள் -- 61 டாங்கிகள் -- ஒரு போர்க் கப்பல்.

சரணடைந்தார் பாகிஸ்தான் தளபதி

வெற்றி முரசு கொட்டி இந்தியப் படை டாக்காவில் நுழைந்தது

வங்காள தேசம் முழுவதும் விடுதலையடைந்தது

நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தி அறிவிப்பு — உறுப்பினர்கள் ஆரவாரத்துடன் வரவேற்பு

புதுடில்லி, டிச. 15—

பாகிஸ்தான் தளபதி நியாசி தமது படைகளுடன் இந்தியாவிடம் நிபந்தனையின்றிச் சரணடைவதாக அறிவித்திருக்கிறார்.

சரணடைவதற்குத் தாம் தயாராயிருப்பதாக இன்று காலை 8-30 மணியளவில் ஜெனரல் நியாசி, ரேடியோச் செய்தித் தொடர்பு மூலம் இந்தியத் தலைமைத் தளபதியிடம் தெரிவித்தார்; அதன்பேரில் இந்தியத் தலைமைத் தளபதி, டாக்காவில் பாகிஸ்தானின் சரணாகதியை ஏற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்கத்தாவிலுள்ள இராணுவ அதிகாரி ஜேக்கப்புக்கு உத்தரவிட்டார்; அவர் உடனே விமானம் மூலம் டாக்காவுக்கு விரைந்திருக்கிறார்; அங்கு சென்ற அவர், சரணடையும் ஏற்பாடு பற்றி, பாகிஸ்தான் தளபதியுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்.

இன்று காலை நமது படைப் பிரிவு ஒன்று டாக்கா நகருக்குள் புகுந்திருப்பதாக, நாடாளுமன்றத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அறிவித்தார். டாக்காவில் புகுந்த நமது படையிடம் பாகிஸ்தானின் 36-வது படைப் பிரிவு தளபதியும் அவரது படையும் சரணடைந்துவிட்டதாகவும் தலைமையமைச்சர் அறிவித்தார்; இச்செய்தியை உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

மேற்கொண்டு தகவல் கிடைத்ததும், தகுந்த நேரத்தில் அவையில் தெரிவிக்கப்படும் என்றும், ஆவலுடன் கேள்வி கேட்ட உறுப்பினர்களுக்கு தலைமையமைச்சர் உறுதியளித்தார்.

நியாசியின் வேண்டுகோளுக்கேற்ப, மேலும் 6 மணி நேரம் -- அதாவது இன்று பிற்பகல் 3 மணிவரை -- டாக்காவில் விமானத் தாக்குதலை நிறுத்திவைக்குமாறு இந்தியப் படைகளுக்கு, இந்தியத் தலைமைத் தளபதி மானெக் ஷா கட்டளை பிறப்பித்தார்.

நேற்று, புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் ஜெனரல் நியாசி விடுத்த வேண்டுகோளை ஏற்று -- நேற்று மாலை 5 மணி முதல் இன்று காலை 9 மணி வரை டாக்காமீது தாக்குதல் நிறுத்திவைக்கப்பட்டது; இன்று மேலும் 6 மணி நேர போர் ஓய்வு கோரினார் நியாசி; அதையும் ஏற்றது.

"இந்தியப் படையிடம் சரணடையப் போவதில்லை -- கடைசி ஆள் இருக்கும் வரை போராடுவோம்" என்று வீரம் பேசிய தளபதி நியாசிதான், இன்று சரணாகதிக்கு முன்வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சரணடைந்ததும், வங்காள தேசம் முழுமையாக விடுதலையடைந்துவிடும்; இனி, பாகிஸ்தான் சார்பில் போரைத் தொடர அங்கு ஆள் இல்லை.

முன்னர் வந்த செய்தி

டாக்காவிலிருந்து நேற்று பிற்பகல் 2-மணியளவில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் படைகளின் தளபதி ஜெனரல் நியாசி, போர் நிறுத்தத்துக்கு இந்தியத் தளபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்; இந்த வேண்டுகோள் அமெரிக்கத் தூதரகம் மூலம் அனுப்பப்பட்டது.

நியாசி, தமது படை சரணடைவதற்கும் -- அதேநேரத்தில் மேற்குப் பாகிஸ்தானுக்குச் செல்லுவதற்கு அனுமதிக்கும் வகையிலும் சில நிபந்தனைகளை விதித்திருந்தார்.

இதன் விவரங்களை இந்திய அரசு வெளியிட்வில்லை; ஆயினும், இந்திய இராணுவத் தளபதி மானெக் ஷா, நேற்று மாலை 5-மணியிலிருந்து இன்று காலை 9-மணிவரை போர் நிறுத்தத்துக்கு அனுமதி அளித்தார்; அத்துடன், எவ்வித நிபந்தனையுமின்றி ஜெனரல் நியாசியும் -- படைகளும் சரணடைய வேண்டுமென்றும், அவர்கள் முழு மரியாதையுடனும் -- ஜெனிவா ஒப்பந்தத்துக்குட்டும் கௌரவமாக நடத்தப்படுவர் என்றும் உறுதி கூறினார்.

"எங்களை மேற்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பவேண்டும்" என்ற தளபதி நியாசியின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறு இல்லையென்றும் தெரியவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

தோல்வியை ஒப்புக்கொண்டது பாகிஸ்தான்

புதுடில்லி, டிச. 15—

வங்காள தேசத்தின் நிலைமை மிக மோசமாக உள்ளது என்பதைப் பாகிஸ்தான் நேற்று ஒப்புக்கொண்டது.

இராவல்பிண்டியில் உள்ள ஓர் அதிகாரி, வங்காள தேச நிலைமை மோசமடைந்துவிட்டதாக நிருபர்களிடம் கூறினார்.

பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியது

புதிய திட்டம் பற்றி ஆய்வு

நியூயார்க், டிச. 15—

டாக்காவில் நிலைமை மோசமடைந்துவிட்ட செய்தி அறிந்ததும், இன்று காலை ஐ. நா. பாதுகாப்புச் சபை அவசரமாகக்கூடி, இந்தியா -- பாகிஸ்தான் போரை நிறுத்துவது தொடர்பான புதிய திட்டம் ஒன்றை விவாதித்தது.

எதிரிப் படைகளின் தந்திரம்

நடுநிலைப் பகுதிக்குள் மறைந்திருக்கின்றனராம்

புதுடில்லி, டிச. 16—

வங்க தேசத்திலுள்ள ஆக்கிரமிப்புப் படைகள் இப்போது, 'நடுநிலைப் பகுதி' என அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இடங்களில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

அவர்களின் கிழக்குப் பகுதித் தலைமையகம் -- பல்கலைக் கழகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

விமானப் படைத் தலைமையகம் -- காசநோய் மருத்துவமனையிலும், இராணுவக் கண்காணிப்பு நிலையம் -- நடுநிலைப் பகுதியான இன்டர் கான்டினென்டல் ஓட்டல் மாடியிலும் நிறுவப்பட்டிருக்கிறதாம்.

7-வது கடற்படைக்கு அந்த அதிகாரம் ஏது?

அத்துமீறினால் மோதுதல்தான்

புதுடில்லி, டிச 16—

"வங்காள விரிகுடாவில் நுழைந்திருப்பதாகக் கூறப்படும் அமெரிக்காவின் 7-வது கடற்படைக் கப்பல்களுக்கு வங்காளதேசத்திலுள்ள பாகிஸ்தான் படைகளை வெளியேற்றுவதற்கான பணியை ஏற்கும் அதிகாரம் எதும் கிடையாது"

என்று இங்குள்ள அதிகார வட்டாரங்கள் கருத்தறிவித்தன; மேலும் அவ்வட்டாரங்கள் கூறியதாவது:—

"ஏழாவது கப்பற்படையாக இருந்தாலும் சரி -- அன்றி வேறு எந்த அந்நிய நிறுவனமாக இருந்தாலும் சரி -- இந்தியப் படைகளுடனும், 'முக்தி வாகினி'ப் படைகளுடனும் போர் புரிந்து கொண்டிருக்கும் மேற்குப் பாகிஸ்தான் படைகள் மீது அவற்றுக்கு அதிகாரம் கிடையாது."

மேற்குப் பாகிஸ்தான் துருப்புக்களை வெளியேற்றிச் செல்வதற்கான 'கடல் முகப்பை'ப் பெறுவது அமெரிக்கப் படையின நோக்கமாக இருக்கக்கூடும் என்று யூகிக்கப்படுகிறது.

நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் -- என்ற இந்தியத் தளபதியின் கோரிக்கையை, பாகிஸ்தான் தளபதி ஏற்பாரா அல்லது அமெரிக்காவின் ஏழாவது கடற்படையின் உதவியுடன் தப்பித்து ஓடுவதற்கு முயற்சிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அமெரிக்கக் கடற்படையின் உதவியுடன் மேற்குப் பாகிஸ்தானுக்குத் தப்பிப்போவதற்கு அவர்கள் முயற்சித்தால், நிலைமை மிகவும் சிக்கலாகிவிடும்; ஏனென்

(4-ம் பக்கம் பார்க்க)

அனைத்துக் கட்சிக் கண்டனம்

புதுடில்லி, டிச. 16—

7-வது கடற்படையை வங்காள விரிகுடாவுக்கு அனுப்பிய நிக்சனின் நடவடிக்கையை, இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கண்டித்திருக்கின்றனர்.

இந்தியப் பெருங்கடலை நோக்கி ரஷ்யக் கப்பல்கள்

அமெரிக்கக் கடற் படையை நோக்கி நெருங்கி வருகின்றனவா?

டோக்கியோ, டிச. 15—

சோவியத் இரஷ்யாவின் ஏவுகணைக் கப்பல் ஒன்று இந்தியப் பெருங்கடலை நோக்கி விரைந்துகொண்டிருப்பதாக ஜப்பான் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று தெரிவித்தது.

கடந்த 9-ஆம் நாளன்று மற்றோர் இரஷ்ய ஏவுகணைக் கப்பலும் -- நீர்மூழ்கியும் இதே இடத்திற்குச் சென்றிருப்பதாகவும் அது தெரிவித்தது.

இவை அமெரிக்கக் கப்பற் படை இருப்பதாகக் கூறப்படும் வங்காள விரிகுடாவில் முகாமிடச் சென்றுகொண்டிருப்பதாகவும் அது கருத்தறிவித்தது.

இச்செய்தியைத் தெரிவித்த ஜப்பானியச் செய்தி நிறுவனம், ஏற்கனவே இந்தியப் பெருங்கடலில் போர்க் கப்பல்கள் -- ஏவுகணைக் கப்பல்கள் உட்பட சுமார் 20 கப்பல்கள் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகக் கூறியது.

பாதுகாப்பு நிதி-தமிழகத்தில் ரூ. 10 கோடி திரட்ட முடிவு

‘அவசரப்பட்டு அல்ல--தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை உணர்ந்தே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது’

முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு -- அனைவரும் உறுதுணையாக இருக்குமாறு வேண்டுகோள்

சென்னை, டிச. 16—

“இன்று ஆக்கிரமிப்பை முறியடிக்கக்கூடிய -- நமது மண்ணைக் காக்க -- சுதந்தரத்தை நிலைநிறுத்தப் போர்முனையில் நமது வீரர்கள் குருதியைக் கொட்டுகிறார்கள்; அவர்களது குடும்பத்துக்கு உதவும் பொறுப்பை அரசும் – மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

“இதை மனத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் ரூ. 10 கோடி பாதுகாப்பு நிதியாகத் திரட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது; இந்த ரூ. 10 கோடிகூட, பாதுகாப்பு நிதிக்கு முதல் தவணையாகத்தான் இருக்கும்.

“இந்த முடிவை அவசரப்பட்டு நாங்கள் எடுக்கவில்லை; தமிழக மக்களின் இதயத்தை உணர்ந்துதான் இம்முடிவை மேற்கொண்டிருக்கிறோம்; ‘ஆபத்தை நீக்க -- நாட்டைக் காக்கத் தமிழக மக்கள் எவ்வளவு கேட்டாலும் தருவார்கள்’ என்ற நம்பிக்கையில்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம்; இதற்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.”

இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், போர் நெருக்கடியையொட்டித் தமது தலைமையில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கூறினார்.

நிதி திரட்டுவது எப்படி?

நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பேசுகையில், முதலமைச்சர் மேலும் கூறியதாவது:—

“இந்த நிதியைத் திரட்டுவதற்கான சில வழிமுறைகளைக் கையாளலாம் என்று கருதுகிறோம்; தொழில் துறை நிறுவனங்கள் -- வர்த்தகக் கழகங்கள் ஆகியவை இந்த நிதிக்குத் தாராளமாக நன்கொடை வழங்கலாம்.

“தொழிலாளர்கள் தங்கள் ஒரு நாள் ஊதியத்தைப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்கலாம்; இதற்கான வேண்டுகோளைத் தொழிற் சங்கத் தலைவர்கள் விடவேண்டும்.

“பொதுத் துறை -- தனியார் துறை -- அரசுத் துறைகளில் பணிபுரிபவர்கள், ஒரு நாள் ஊதியத்தைக் கொடுக்கலாம்.

“விவசாயிகளும் -- வியாபாரிகளும் தங்கள் வருவாயில் ஒரு பகுதியை இந்த நிதிக்கு வழங்கலாம்.

“திரைப்படக் கோட்டகை அதிபர்கள், தங்கள் ஒரு நாள் வசூலை இதற்கு அளிக்கலாம்; திரைப்படக் கலைஞர்கள நன்கொடைகள் வழங்குவதுடன், கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பணம் திரட்டிக் கொடுக்கலாம்.

“மாணவர்கள் உண்டியல் மூலமும் -- கலை நிகழ்ச்சிகள் மூலமும் இதற்குப் பணம் திரட்டி உதவலாம்.”

இந்த அடிப்படையில் உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், மேலும் கூறியதாவது:—

“நம் நாடு எவ்வளவு நெருக்கடியான நிலையில் இருக்கிறது என்பதை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; இதை இங்குள்ள அனைவரும் நன்ருக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நம் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும், தங்கள் பொறுப்புகளையும் -- கடமைகளையும் உணர்ந்து ‘எப்பணி செய்யவும் தயாராக இருக்கிறோம்’ என்று கூறும் அளவுக்கு உணர்ச்சிமயமான கட்டத்தில் இருக்கிறோம்.

இந்த நெருக்கடியான நேரத்தில், நமது நடவடிக்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்று சிந்திக்கவும் -- சிந்தித்தவைகளைச் செயலாற்றவும் -- செயலாற்றுவதற்குத் தேவையான அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கும் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

எதிரியைப் போரில் வீழ்த்தப் போர்க் கருவிகளும் -- போர் வீரர்களும் மட்டும் போதாது; நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் -- தன்னைப் போர் வீரன் என்று கருதிக்கொண்டு, தான் இருப்பது வீட்டில் அல்ல -- மண்டபத்தில் அல்ல -- அலுவலகத்தில் அல்ல -- போர் முனையில்’ என்ற நினைப்போடு பணியாற்ற வேண்டியது கடமையாகும்.

போருக்கு ஒரு நாடு ஆட்படுத்தப்பட்டால், போரில் எதிரியை வீழ்த்துவது மட்டும் அல்ல—இதனால் ஏற்படும் பின் விளைவு, நிகழ்கால நிலை ஆகியவைகளை ஆராய்ந்து பார்த்துப் பரிகாரம் காண்பது அவசியமாகும்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில், வீரர்களைப் போர்முனைக்கு அனுப்பத் தடை இல்லை; வீரர்களை மட்டும் அனுப்பினால் போதாது --- அவர்களுக்குத் தேவையான கருவிகளையும் --வசதிகளையும் நாம் அளித்தாக வேண்டும்; இதற்கு ஏராளமான அளவில் நிதி தேவை.

முன்பு சீனப் படையெடுப்பின்போது தமிழக அரசின் சார்பில் ரூ 3 கோடி பாதுகாப்பு நிதியாகத் திரட்டி அளிக்கப்பட்டிருக்கிறது.

1965-ம் ஆண்டில் நடந்த பாகிஸ்தான் படையெடுப்பின்போது ரூ. 1.50 கோடி தமிழகத்தின் சார்பாகப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

முன்பு நடைபெற்ற போர்களைப் போல இப்போது நடைபெறும் போரை எண்ண முடியவில்லை; ஏனென்றால், பாகிஸ்தான் சர்வாதிகாரி யாகியா கான், ‘இந்தியாவுடன் இதுவே கடைசிப் போர்’ என்று அறிவித்துவிட்டுப் போர்க் களத்தில் இறங்கியிருக்கிறார்.

அமெரிக்கா போன்ற ஆதிக்க வெறிகொண்ட நாடுகளும், பாகிஸ்தானுக்கு அநியாயமாகத் துணைபோகும் நிலைமையைக் காண்கிறோம்.

அமெரிக்கப் போர்க் கப்பல் வங்கக் கடலில் நுழைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது; இதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் குமுறலும் -- கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த கப்பலை, தன் நாட்டைச் சேர்ந்தவர்களை டாக்காவிலிருந்து ஏற்றிச் செல்ல அமெரிக்கா அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது; ‘44 பேர்களை ஏற்றிச் செல்ல இவ்வளவு பெரிய போர்க் கப்பல் தேவைதானா’ என்ற கேள்வி நம் மனதில் எழாமல் இல்லை.”

கூட்டத்தில் தமிழக ஆளுநர் கே. கே. ஷா, முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம், திருப்பூர் மொய்தீன் (முஸ்லிம் லீக்), இராஜாராம் நாயுடு (சிண்டிகேட்) சே. டி. கே. தங்கமணி (வ.கம்.) ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்), எச். வி. ஹண்டே (சுதந்), வீரமணி (தி க), தொழிற்சங்கத் தலைவர்கள் -- தொழில் அதிபர்கள் --பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஆகியோர் பேசினார்கள்.

முடிவில் முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

இங்கு பேசிய கே. டி. கே. தங்கமணி, பெண்கள், தங்க நகைகளைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கும்படி வேண்டுகோள் விடும்படி கூறினார்.

நகைகளைப் பெறுவதில் சிரமம் இருக்கிறது; இதற்காகத் தனிக் கணக்கு வைத்துக்கொள்வது கடினம்; நெருக்கடி நிலைமை நீங்கிய பிறகு இது குறித்துப் பல சந்தேகங்களைச் சிலர் கிளப்புவார்கள்; எனவே, பாதுகாப்புக்குத் தங்க நகைகளை பெறவேண்டாம் என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்; அப்படியே கிடைத்தாலும், அதை ஏலம்போட்டுப் பணமாக்கி நிதியில் சேர்க்கும்படி கூறியிருக்கிறேன்.

மாவட்டக் குழுக்கள்

மாநில அளவில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவைப் போல், மாவட்ட அளவிலும் கட்சி சார்பற்ற குழுக்கள் அமைக்கப்படும்; இது குறித்து 18-ந்தேதியன்று மாவட்டக் கலெக்டர்களை அழைத்து பேசவிருக்கிறேன்.

இந்தியப் பாதுகாப்பு நாள்

டிச. 26-ந் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று ‘இந்தியப் பாதுகாப்பு நாள்’ கொண்டாடப்படும்; அன்றையத் தினம் எல்லா மாவட்டங்களின் தலைநகரிலும் சர்வகட்சிக் கூட்டங்கள் நடைபெறும்.

சென்னையில் உருவாகும் தாகூர் நினைவு கலையரங்கம்

3,500 பேர் அமர்ந்து பார்க்க வசதியாக அமையும்

பழைய திட்டத்தை மாற்றி அமைக்க அரசு முடிவு

சென்னை, டிச. 13—

“சென்னையில் சிம்ஸ் சாலையில் கட்டப்படும் தாகூர் நினைவுக் கலையரங்கத்தில் சில மாறுதல்கள் செய்யும் பொருட்டுப் புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி தலைமை எஞ்சினீயர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்”

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மேலவையில் கேள்வி நேரத்தின்போது கூறினார்; அவர் மேலும் விளக்கியதாவது:—

“தாகூர் அரங்கம் கட்டும் வேலை 1960-ம் ஆண்டு தொடங்கப்பட்டது; ரூ 15.32 இலட்சம் இதற்கு செலவாகும் மதிப்பிடப்பட்டது; நாட்டு நெருக்கடி நிலை காரணமாகக் கட்டும் வேலை 1962-ல் நிறுத்தி வைக்கப்பட்டது; மீண்டும் 1964-ல் வேலை தொடங்கப்பட்டது; 1965-ல் பாகிஸ்தான் போர் காரணமாக வேலை நிறுத்தி வைக்கப்பட்டது; 1969-ல் மறுபடியும் வேலை தொடங்க உத்தேசிக்கப்பட்டது; இதற்கிடையில், விலையேற்றம் காரணமாக ஏற்கனவே திட்டமிட்டபடி கலையரங்கத்தைக் கட்டி முடிக்க முடியாதென்றும் திருத்திய திட்டப்படி ரூ. 22 இலட்சம் தேவைப்படுவதாகவும் தலைமைப் பொறியர் அறிவித்துள்ளார்.

“இந்த அரங்கத்தில் 1,500 பேர் மட்டுமே இருந்து பார்க்க பழைய திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது; ஆனால், குறைந்த அளவு 3,000 அல்லது 3,500 பேர்கள் இருந்து பார்க்க இடவசதியுடன் இக்கலையரங்கத்தைக் கட்டி முடிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது; அதன்படி, கட்டடங்கள் அமைப்பதில் சில மாறுதல்கள் செய்யும் பொருட்டுப் புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி தலைமைப் பொறியர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.”

புதுவை அரசு ஊழியர்கள்

அரைமணி நேரம் கூடுதலாகப் பணியாற்றுவர்

புதுவை, டிச. 14—

நெருக்கடி நிலையை முன்னிட்டுப் புதுவை மாநில அரசு ஊழியர்கள், சனிக்கிழமை உட்பட நாள்தோறும் அரைமணி நேரம் கூடுதலாகப் பணியாற்றுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தளவாய்புரம் வட்டார கணக்கர்கள் முன்னேற்ற சங்கம்

இராசபாளையம் -- தளவாய்புரம் வட்டாரத்தில் கைத்தறித் துணி உற்பத்தி—விற்பனை அலுவலகங்களில் கணக்கர்களாகப் பணியாற்றுவோர், வார விடுமுறையின்றி சிரமப்பட்டுவந்தனர்.

கடந்த ஜூலைத் திங்களில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை செயற்குழு உறுப்பினர் இரா. மா. பொன்னுசாமியின் ஆலோசனையின் பேரிலும் -- பொறுப்பிலும் தளவாய்புரம் வட்டார கணக்கர்கள் முன்னேற்றச் சங்கம் துவக்கப்பட்டது.

சங்கத்தின் மூலம், ‘கணக்கர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வார விடுமுறை விடப்பட வேண்டும்’ எனக் கைத்தறி துணி உற்பத்தி -- விற்பனை நிலைய உரிமையாளர்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பாகிஸ்தானில் பெட்ரோல் ரேஷன்

கராச்சி, டிச. 15—

பற்றுக்குறை காரணமாக மோட்டார் வண்டிகளுக்கு பெட்ரோல் வழங்குவதில் பங்கீட்டு முறையைச் செயல்படுத்துமாறு பாகிஸ்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

டாக்டர்கள்--எஞ்சினியர்கள் போன்ற இன்றியமையா வேலையில் ஈடுபட்டுள்ளோருக்கு வாரத்தில் 31.5 லிட்டரும், ஏனையோருக்கு வாரத்தில் 18 லிட்டரும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

வங்க தேசத்துடன் இரயில் தொடர்பு

‘விரைவில் துவங்கும்’ எனத் தகவல்

புதுடில்லி, டிச. 12—

“மேற்கு வங்கத்துக்கும்—வங்க தேசத்துக்கும் இடையே மிக விரைவில் இரயில் தொடர்பு ஏற்படும்”

என்று மக்களவையில் அமைச்சர் அனுமந்தையா தெரிவித்தார்.

இரஷ்யாவின் நிலை கண்டு அமெரிக்கா நடுக்கம்

உறவைச் சீர்படுத்த முயற்சியாம்

நியூயார்க், டிச. 15—

இரஷ்யா தொடர்ந்து இந்தியாவுக்கு ஆதரவாக இருப்பதில் அமெரிக்கா மிகவும் கவலை கொள்ளுகிறதாம்.

இந்தியா—பாகிஸ்தான் போர், இரஷ்யா—அமெரிக்கா உறவையும் பாதித்து விடுமோ என்று அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுகின்றனராம்.

இரஷ்யாவுடனுன உறவை மேம்படுத்துவதில் அமெரிக்க அரசு முழுக் கவனம் செலுத்திவருகிறது என்றும், அடுத்து நிக்சன் இரஷ்யா செல்லும்போது அது மேலும் சீர்படும் என்றும் கருதிக் கொண்டிருக்கும்போது, இந்தியாவை இரஷ்யா தொடர்ந்து ஆதரித்து வருவது கவலை தருவதாக இருக்கிறது என்றும் அவர்கள் கருதுகின்றனராம்.

நாட்டுப் பாதுகாப்பு:

கலைஞர் சொல் கேளீர்!

“பகையோடு போராடும் நம் தங்கங்கள், பசியோடு போராடாமல் காத்திட வேண்டும் -- அதற்கு நம் வயிற்றைக் கட்டிட வேண்டும்.

“ஆடம்பரம் -- அலங்காரம் -- அழகுக் கோலம் அனைத்தும், ‘பகையொழிந்த வெற்றித் திருநாளுக்கே’ என ஒதுக்கி விட வேண்டும்.

“பிறநாட்டு மண் மீது நமக்கு ஆசை இல்லை -- போர் வெறி கொண்டலையும் கழுகுகளின் இறக்கைதனை வெட்டுவதே நம் கொள்கை! அனைத்துலகும் அமைதிப் புறு சிறகடித்துப் பறக்க வேண்டும் என்பதே நம் நோக்கம்!

“இதை உணராத வெறியர் இந்திய மண்ணை மிதித்திடில், சிந்திடும் இரத்தத்தால் காப்போம்! அறநெறி மறுத்து நம் மண்ணை ஆக்கிரமிக்க எவர்வரினும் தயங்கி நில்லோம்!

“கொழித்துவிட்ட மக்கள்போல், குள்ளநரிக் கூட்டத்தை அழித்துவிட்டே மறுவேலை!

“வீரம் மணக்கின்ற நாடு -- வெற்றி முகிழ்க்கின்ற பூமி -- வெறியர் நுழைவதெனில், பூப்பறிக்குமோ எமது கைகள்!”

—21-9-65-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையின் ஒருபகுதி

தமிழ்நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

திட்டங்களை விளக்கி முதலமைச்சர் அறிக்கை

சென்னை, டிச. 16—

தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துத் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், அறிக்கை ஒன்று தாக்கல் செய்தார்.

விமானத் தாக்குதல் முன்னெச்சரிக்கை -- சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை குறித்து ஜி சாமிநாதன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புக்குப் பதிலாக முதலமைச்சர் தாக்கல் செய்த விவர அறிக்கை வருமாறு:—

“தலைவர் அவர்களே! நம் நாட்டில் மேற்கு எல்லைகளில் பாகிஸ்தான் நடத்திய விமானத் தாக்குதலின் விளைவாக மத்திய அரசு நெருக்கடி நிலைமை அறிவித்து -- நம் நாடு முழுவதும் 1968-ம் ஆண்டு சிவில் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறது.

வங்காள தேசத்தின் தகராறுகளினால் ஏற்பட்டுள்ள நிலையினை இவ்வரசும் உணர்ந்துள்ளதோடு அதற்கேற்ப முன் கூட்டியே நல்ல ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது.

அதிகாரிகளைக் கொண்ட சிவில் பாதுகாப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு -- நிலைமையைப் பரிசீலிக்கவும், தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

கண்காணிப்பு ஏற்பாடுகள்

காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் -- பதவியில் உள்ள அதிகாரி ஒருவர், சிவில் பாதுகாப்பு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்; நம் மாநிலம் முழுவதும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவர் பொறுப்பாளி ஆவார்; அவருக்கு உதவி செய்யக் காவல்துறை துணை சூப்பரிண்டெண்டு பதவித் தரத்தில் உள்ள ஒருவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்; கார் ஒன்றும் -- மோட்டார் சைக்கிள் ஒன்றும் சிவில் பாதுகாப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

1962, 1965-ம் ஆண்டுகளில் முறையே பாகிஸ்தானும், சீனாவும் நம் நாட்டின் மீது படையெடுக்க முயன்றபோது, நம் நாட்டிலுள்ள 19 கடற்கரை நகரங்களுக்காகவும், உட்பகுதிகளிலுள்ள தொழிற்சாலைப் பகுதிகளுக்காகவும் தீட்டப்பெற்ற சில பாதுகாப்புத் திட்டங்கள், தற்கால நிலைமைக்கேற்ப சீர்செய்யப்பெற்றுத் தயாராக உள்ளன; தமிழகத்திலுள்ள கடற்கரைப் பகுதிகளைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அணிகள்

சிவில் பாதுகாப்புச் சட்டம் -- சிவில் பாதுகாப்பு விதிகள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளான -- நகரத்திலும், மாவட்டங்களிலும் சிவில் பாதுகாப்புக் கண்ட்ரோலர்களை நியமித்தல் -- சிவில் பாதுகாப்பு அணிகளை ஏற்படுத்தல் ஆகியவை போன்ற பாதுகாப்புப் பணிகள் அனைத்துக்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள எல்லா மதங்களின் ஆலயங்கள் -- அரசு நிறுவனங்கள் -- பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றை விமானத் தாக்குதலின்போது பாதுகாக்க மத்திய அரசிடமிருந்து பெறப்பெற்ற குறிப்புக்களின்படி சிவில் பாதுகாப்பு இயக்குநர் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

இருட்டடிப்பு ஒத்திகைகள்

சிவில் பாதுகாப்புக் குழுவின் முடிவுகளைத் தொடர்ந்து, சென்னை நகரிலும் -- அதன் சுற்றுப்புறங்களிலும் 27—11—71, 6—12—71 இரு நாட்களில் இருட்டடிப்பு ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன; முதல் ஒத்திகையின்போது, நாளும் -- நேரமும் முன்னதாகவே அறிவிப்பு செய்யப்பட்டன; இரண்டாம் ஒத்திகையின்போது, நேரத்தைப் பற்றி முன்னறிவிப்பு செய்யாமலேயே குறிப்பிட்ட மூன்று நாட்களுள் யாதேனும் ஒரு நாளில் ஒத்திகை நடைபெறும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது; அடுத்த ஒத்திகை, நாள் குறிப்பிடாமலேயே நடத்தப்படும்; இந்த ஒத்திகைகள் மிகவும் வெற்றிகரமாகவே நடைபெற்றிருக்கின்றன.

கூடுதலாக அபாயச் சங்குகள்

நகரிலும் -- அதன் சுற்றுப்புறங்களிலும் விமானத் தாக்குதலுக்கான அபாயச் சங்கின் ஒலி கேட்கப்பெறும் பரப்பினை அதிகரிக்கத் தற்போது உள்ள 40 அபாயச் சங்குகளுக்குக் கூடுதலாக, மேலும் 60 அபாயச் சங்குகள் பொருத்தப்படும்; தகுந்த 12 இடங்களில் அபாயச் சங்குகளைப் பொருத்த 60 அடி உயரமுள்ள இரும்புச் சிகரங்களும் அமைக்கப்படும்.”

நாட்டுப்பாதுகாப்புக்குழு

முதல்வர் கலைஞர் தலைமையில் இயங்கும்

நிதி -- விளம்பரக் குழுக்களும் அமைப்பு

சென்னை, டிச. 15—

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்குத் தமிழ்நாட்டு மக்களின் ஒத்துழைப்பையும், அவர்கள் அளிக்கும் உதவிகளையும் ஒருமுகப்படுத்தி நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக, ‘தேசியப் பாதுகாப்புக் குழு’ அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுவின் காப்பாளராக ஆளுநர் கே. கே. ஷாவும் -- தலைவராக முதலமைச்சர் கலைஞரும் – அமைப்பாளராகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளரும் இருப்பார்கள்.

குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் விவரம் வருமாறு:--

சி. பி. சிற்றரசு (மேலவைத் தலைவர்)
கே. ஏ. மதியழகன் (சட்டப் பேரவைத் தலைவர்)
நாவலர் இரா. நெடுஞ்செழியன்
பேராசிரியர் க. அன்பழகன்
என். வி. நடராசன்
சத்தியவாணிமுத்து
ப. உ. சண்முகம்
செ. மாதவன்
எஸ். ஜே. சாதிக் பாட்சா
சி. பா. ஆதித்தனார்
அன்பில் தருமலிங்கம்
க. இராசாராம்
ஓ. பி. இராமன்
எஸ். இராமச்சந்திரன்
மு. கண்ணப்பன்
எம். பக்தவத்சலம்
கக்கன்
ஜோதி வெங்கடாசலம்
பூவராகன்
மேயர் காமாட்சி செயராமன்
மதுரை மேயர் எஸ். முத்து
காயிதேமில்லத் இஸ்மாயில்
ம. பொ. சிவஞானம்
பி. டி. இராசன்
கி. வீரமணி
ஏ. பி. சி. வீரபாகு
நாஞ்சில் கி. மனோகரன்
இரா. செழியன்
முரசொலி மாறன்
கே. இராசாராம்
சா. கணேசன்
ஏ. ஆர். தாமோதரன்
எஸ்.எஸ் இராமசாமிபடையாச்சி
செயராம ரெட்டியார்
டி. கே. சண்முகம்
அப்துல் வகாப்
எம். ஆறுமுகசாமி
பொன்னப்ப நாடார்
கே. டி. கே. தங்கமணி
திருப்பூர் மொய்தீன்
ஏ. ஆர். பெருமாள்
எச். வி. ஹண்டே
ஏ. ஆர். மாரிமுத்து
ஏ. தியாகராசன்
என். காசிராமன்
ஜி. பராங்குசம்
து. ப. அழகமுத்து
நீலநாராயணன்
குன்றக்குடி அடிகளார்
இராம. அரங்கண்ணல்
கே. வி. சுப்பையா
செ. கந்தப்பன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். ஆர். வெங்கட்ராமன்
சி. டி. தண்டபாணி
காட்டூர் கோபால்
ஜி. இராமானுசம்
அந்தோணிப்பிள்ளை
ஏ. எஸ். கே. அய்யங்கார்
எம். ஜி. ஆர்.
சிவாஜி கணேசன்
எஸ். எஸ். இராசேந்திரன்
ஜெமினி கணேசன்
ஏ. எல். சீனிவாசன்
ஏ. வி. மெய்யப்பன்
பி நாகிரெட்டி
சுந்தர்லால் நகாதா
அருளப்பா
நிபூ பிகின்
எம். சந்தோஷம்
ஆர். மாதுபூதம்
திருமதி மஞ்சு பாஷினி
சரோஜினி வரதப்பன்
அலமேலு அப்பாதுரை
செண்பகலட்சுமி
நாகலட்சுமி அம்மாள்,
கிளப்வாலா அம்மையார்
எஸ். விஜயலட்சுமி,
ஏ. பி. மரக்காயர்
ஜி. கஸ்தூரி
ஏ. என். சிவராமன்
வி. பி. வி. இராசன்
ஆர். எஸ். இரத்தினம்
வெங்கண்ண சவுத்திரி
கே. டி. ஷா
சுனி காசிப்
எம். ஏ. எம். இராமசாமி,
ஏ. பி. அனந்தகிருஷ்ணன்
ஆஸ்கார் அலி தாலே
பீதர் ஸ்டோன்,
எம். ஏ. முத்தையா செட்டியார்
என். மகாலிங்கம்
வெங்கடசாமி நாயுடு
எம். ஏ. சிதம்பரம்
டி. சி. கோத்தாரி
சிவசைலம்
வி. எஸ். தியாகராசன்
டி. எஸ். கிருஷ்ணா
ஏ. எம். எம். அருணாசலம்
எம். சி. டி. முத்தையா
கே. ஈசுவரன்
ஹாஜா சரீப்
என். சீனிவாசன்
மாமன் மாப்பிள்ளை
மருதப்பிள்ளை
சென்னை சேரிப்
இரத்தினம்
கோவிந்தசாமி நாதன்
கிருஷ்ணமூர்த்தி
சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
தமிழ்நாடு தலைமைப் போலீசு அதிகாரி (ஐ. ஜி.)
தமிழக அரசின் செயலாளர்கள்
செய்தி -- மக்கள் தொடர்புத் துறை அதிகாரி

நிதிக் குழு

இந்தக் குழுவைத் தவிர, கீழ்க்கண்ட மேலும் 4 குழுக்களையும் தமிழக அரசு அமைத்துள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு நிதி திரட்டும் குழு:—

தலைவர்: அமைச்சர் நெடுஞ்செழியன்

அமைப்பாளர்: தமிழக அரசின் தொழில்துறை செயலாளர்

உள்நாட்டுப் பாதுகாப்புக் குழு:—

தலைவர்: அமைச்சர் க. அன்பழகன்

அமைப்பாளர்: பொதுத் துறையின் இணைச் செயலாளர்

விளம்பரக் குழு

பாதுகாப்புப் பணிகளின் விளம்பரக் குழு:—

தலைவர்: அமைச்சர் என். வி. நடராசன்

அமைப்பாளர்: செய்தி -- மக்கள் தொடர்புத் துறை இயக்குனர்

பாதுகாப்பு பணிகளுக்கு வசதிகள் செய்யும் குழு:—

தலைவர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார்

அமைப்பாளர்: சமுதாய நலத் துறை செயலாளர்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஈட்டுப் படி

மரணமடைந்த உறுப்பினர் குடும்பத்துக்கு உதவிப் பணம்

சட்டப் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

சென்னை, டிச. 16—

தமிழ்நாடு சட்டப் பேரவை -- மேலவை ஆகிய இரு அவைகளையும் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ரூ. 100 ஈட்டுப் படியாக இவ்வாண்டு அக்டோபர் மாதத்திலிருந்து கிடைக்க வழி செய்யும் ஒரு மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

அதேபோன்று பதவிக் காலத்தில் மரணமடைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு -- (அப்படி மரணமடைந்த உறுப்பினரின் பதவிக்காலம் முடியும்வரை ரூ. 100 தருவது என்ற திட்டம் 1967 சனவரியிலிருந்து செயலாக வழிசெய்யும் ஒரு திருத்தமும், ‘சம்பளம் வழங்குதல்’ சட்டத்தில் சேர்க்கப்பட்டு--இரண்டு பிரிவுகளும் சட்டப் பேரவையில் நிறைவேறியது.

“உறுப்பினர்களுக்குத் தரப்படும் ஈட்டுப் படி ஆகஸ்டு மாதத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும்” என்று திரு. சே. டி. கே. தங்கமணியின் (வலது கம்யூ) கோரிக்கையை, சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், ‘இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையில் இது இயலக்கூடியதன்று’ என்று நிராகரித்தார்.

விற்பனை வரி பாக்கி

வசூலிக்க அரசு நடவடிக்கை

சென்னை, டிச. 14—

“தமிழ்நாட்டில் பொது விற்பனை வரி பாக்கி கடந்த மார்ச் மாதம் இறுதியில் ரூ. 3,44,00,000 பாக்கி இருந்தது; மத்திய விற்பனை வரி ரூ 2.09 கோடி பாக்கி இருந்தது; வரி பாக்கிகளை வசூலிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது”

என்று அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

“10 ஆண்டுகளுக்குமேல் நிலுவையாக உள்ள தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும்; வசூலிக்கப்பட இயலாவிட்டால் அவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் -- என்று வணிக வரி அதிகாரிகளுக்கும், வணிக வரி துணை ஆணையர்களுக்கும் வருவாய்த் துறை வாரியம் கட்டளை பிறப்பித்துள்ளது; நிலுவைகள், வரும் மாதங்களில் இயன்றவரை வசூலிக்கப்பட்டு -- நிலுவைத் தொகை குறைக்கப்பட்டு விடும்” என்றும் அமைச்சர் கூறினார்.

வெளிநாட்டினருக்குப் பாதுகாப்பு

தலைமைத் தளபதி உத்தரவு

புதுடில்லி, டிச. 14—

டாக்காவில் உள்ள எல்லா வெளிநாட்டுக் குடிமக்களுக்கும் -- சிறுபான்மைக் குடிமக்களுக்கும், பாதுகாப்பு அளிக்கும்படி எல்லாத் தளபதிகளுக்கும் இந்தியத் தலைமைத் தளபதி மானக்ஷா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பூட்டோவின் காட்டுக் கூச்சல்

சமரசத் திட்டத்தைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியே ஓட்டம்

நியூயார்க், டிச. 16—

"இந்தியா — பாகிஸ்தான் போர் பற்றி விவாதிக்க ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையை உடனே கூட்ட வேண்டும்" என்று பூட்டோ நேற்று வேண்டுகோள் விடுத்தார்; இதையொட்டிப் பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியது; 15 நாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்; இந்தியா — பாகிஸ்தான் பிரதிநிதிகள் தனி அழைப்பின்மீது கலந்துகொண்டனர்.

இந்தியா — பாகிஸ்தான் சமரசத்திற்கான புதிய திட்டம் பற்றிய அறிக்கை எல்லா நாட்டுப் பிரதிநிதிகளிடமும் கொடுக்கப்பட்டன; அதைப் படித்துப் பார்த்தவுடன் பூட்டோ ஆவேசமாக எழுந்தார்; சபையின் நடுவில் நின்றுகொண்டு சமரசத் திட்டத்தைக் கிழித்தெறிந்தார்; பின்பு அவர் பேசியதாவது :—

"ஐ. நா. சபை தன் கடமையிலிருந்து தவறிவிட்டது; பாகிஸ்தானியர்களின் எண்ணத்தை ஐ. நா. சபை மதிக்கவில்லை.

பாகிஸ்தானைச் சரணடையச் செய்ய புதிய திட்டம் இங்கு தீட்டப்பட்டுள்ளது; சரணடையும் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இங்கு நான் வரவில்லை; சரணடையும் திட்டம் எதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

ஐ. நா. சபையின் நடவடிக்கைகள் மோசடியாகவும் — கேலிக்கூத்தாகவும் மாறிவிட்டன; ஐ. நா. சபை நாகரீக மாளிகையாக மாறிவிட்டது!

இந்த நாகரீக மாளிகைக்குள் அசிங்கமானவர்கள் — ஆக்கிரமிப்பாளர்கள் ஒளிந்துகொண்டிருக்கிறர்கள்; அவர்களுக்கே ஐ. நா. சபை பாதுகாப்புக் கொடுக்கிறது!

ஐ.நா. அவைப் பொதுச்செயலாளர் யாரும் தேவையில்லை; தூக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரிதான் தேவை!

கிழக்குப் பாகிஸ்தானின் தலைநகரான டாக்கா, எதிரியின் கையில் வீழ்ச்சியடைவதை எல்லோரும் வேடிக்கை பார்க்கிறீர்கள்! இதுவே, ஐ. நா. அவையின் நோக்கம்!

ஐ. நா. அவையில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் இனிமேல் பாகிஸ்தான் கட்டுப்படாது.

இரஷ்யாவை நான் பாராட்டுகிறேன்; தவறான பாதையாக இருந்தாலும், அது ஒரு நாட்டை (இந்தியாவை) நிலையாக ஆதரிக்கிறது; ஆனால், நடுநிலை வகிக்கும் இங்கிலாந்து — பிரான்சு ஆகிய இரு நாடுகளும் யாரையும் ஆதரிக்காமல் வேடிக்கை பார்க்கின்றன.

ஐ.நா. அவையில் இதுவே என் கடைசி பேச்சு; என் நாட்டுக்கு நான் இப்போதே திரும்பிப் போகிறேன்; அங்கு தொடர்ந்து போர் செய்வேன்; நான் போகிறேன்."

இவ்வாறு கூறிவிட்டு, பூட்டோ, ஐ. நா. அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்; பாகிஸ்தானின் மற்ற பிரதிநிதிகளும் வெளியேறினர்.

உடனே, ஐ.நா. அவையின் பாதுகாப்புச் சபை ஒத்திவைக்கப்பட்டது.

சமரச தீர்மானம் என்ன?

"வங்காள தேசத்தைச் சுதந்தர நாடாக ஒப்புக்கொண்டு ரகிமானை விடுதலை செய்ய வேண்டும்; அப்போதுதான் இந்தியா — பாகிஸ்தான் போர் ஓய்வடையும்" என்று சமரசத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

பா. வே. மாணிக்க நாய்க்கர் நூற்றாண்டு விழா

தமிழ்க் கலைமன்றத்தின் சார்பில் 18—12—71 மாலை 7 மணிக்கு, சென்னை — அண்ணா சாலை மத்திய நூலகக் கட்டடத்தில் திரு. பா.வே. மாணிக்க நாய்க்கர் நூற்றாண்டு விழாவும் — படத் திறப்பும்; தலைவர்: ப. சிவலிங்கம்; பேசுவோர்: வ. சுப்பையா, நாரண துரைக்கண்ணன்.

நாடு திரும்பிய அகதிகள்

இதுவரை 50,000 பேர்

கல்கத்தா, டிச. 16—

வங்க தேசம் விடுதலையடைந்து வருவதைத் தொடர்ந்து மேற்கு வங்கத்திலிருந்து சுமார் 50,000-திற்கு மேற்பட்ட அகதிகள் தாயகம் திரும்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடுந் தாக்குதலுக்கு கராச்சி இலக்கு

புதுடில்லி, டிச. 16—

நேற்று இரவு இந்திய விமானப் படை விமானங்கள் கராச்சி நகரைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்றன.

கடந்த ஐந்து நாட்களாக இதன் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை.

பாகிஸ்தானிலேயே பெரிய நகரம் நகராங்கியாகும்.

இங்கு ஏற்பட்ட சேத விவரம் உடனடியாகத் தெரியவில்லையாயினும், இதுவரை நடைபெற்ற கடுமையான தாக்குதலில் இது ஒன்றாகும் என்று கூறப்படுகிறது.

எதிரியின்மண்ணில் ஓடும் இந்திய இரயில்

புதுடில்லி, டிச. 15—

இராஜஸ்தானின் பார்மர் பகுதியில்—எல்லைக்கு அப்பால் பாகிஸ்தான் பகுதியில்-இந்திய அரசின் இரயில் ஓடத் துவங்கியிருக்கிறது. இந்த இரயில் பயணிகள் பெட்டியும் மற்றும் தண்ணீர் டாங்கிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்று காலை 9-மணிக்குள் சரணடையவில்லையானல், தாக்குதல் மீண்டும் துவக்கப்படும் என்று எச்சரித்த தளபதி மானெக் ஷா, உயிர் தப்ப வேண்டுமானல் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதையும் மீண்டும் ஒரு தடவை எடுததுக்காட்டியிருக்கிறர்; தமது நல்லெண்ணத்தின் அறிகுறியாக நேற்று மாலையிலிருந்து விமானத் தாக்குதலை ரத்து செய்ததுடன், அவ்வப்போது கலந்துபேசுவதற்கு வசதியாக டாக்காவுக்கும் — கல்கத்தாவுக்கும் இடையே தனி ரேடியோ தொடர்புக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

நேற்று ஏற்பட்ட இந்தத் திடீர்த் திருப்பம், போரின் நிலைமையையே மாற்றியது; நிலைமையை, இந்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுவினரும் — முப்படைத் தளபதிகளும் பல தடவை கூடி நேற்று பரிசீலித்தனர்.

அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் இந்தியக் கடலுக்குள் வந்து கொண்டிருப்பதையும், அவைகள் வங்க தேசத்தை நெருங்குமொருட்டுக் காலங்கடத்துவதே பாகிஸ்தான் தளபதி நியாசியின் நோக்கமாக இருக்குமோ என்பது குறித்தும் அரசு கவனமாகப் பரிசீலித்தது; எல்லா நிலைமையையும் ஆராய்ந்த பிறகே போர் நிறுத்தக் காலக்கெடு அளிக்கப்பட்டிருக்கிறது.

எப்பாடுபட்டேனும் யாகியா ஆட்சியைக் காப்பாற்ற அமெரிக்கா முயற்சி செய்துவருகிறது.

அமெரிக்கக் கப்பல் இங்கு வருவது, வங்க தேசத்தில் மீதியிருக்கும் மேற்குப் பாகிஸ்தான துருப்புக்களை வெளியேற்றும் நோக்குடன்தான இருக்கவேண்டும் என்றும் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இதுவுமின்றி, வங்க தேசத்தில் இருக்கும் பீகாரி முஸ்லிம் சிறுபான்மையினர் கொடுமைப்படுத்தப்படுவர் என்ற ஒரு அச்சத்தையும் அமெரிக்கா வெளியிட்டிருக்கிறதாம்; இவர்களைக் காப்பாற்றவும் முயற்சிப்பதாக அமெரிகக்கா சொல்லககூடும்.

ஆனல் அமெரிக்காவின் இந்தக் கெடுநோக்கில் இந்தியா ஏமாறப் போவதில்லை என்பது மட்டும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது; சிறுபான்மையினருக்கு முழுப் பாதுகாப்பும் — சரணடையும் எதிரிகளுக்கு உலக நியதிப்படி உரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்படும் என்று பலதட்வை இந்தியா சார்பில் உறுதி கூறப்பட்டிருக்கிறது.

'சிறுபான்மையினரை வெளியேற்ற' அமெரிக்கக் கடற்படை ஏதாவது நடவடிக்கை எடுக்குமானல், அதனை, இந்தியாமீதும் — வங்கதேச அரசுமீதும் அமெரிக்கா தொடுக்கும் ஒரு போராகவே இந்தியா மதிக்கும் என்று கூறப்படுகிறது.

"இந்தியா, லெபனனே — டொமினிகன் குடியரசோ அல்ல என்பதை அமெரிக்கா உணரவேண்டும்" என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

இங்கெல்லாம், 'வெள்ளையரைக் காப்பாற்ற' என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு அமெரிக்காவின் 7-வது கடற்படை செயல்பட்டிருந்தது; இப்போது, சிறுபான்மையோர் குறிதது கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா, வங்க தேசத்தில் பாகிஸ்தான இராணுவம் இனக் கொலை நடத்தியபோது கண்மூடியிருந்து வந்திருப்பதை நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமெரிக்காவின் நடவடிக்கை வெளிப்படையாகக் கண்டிக்கப்படவில்லையாயினும், இந்தியா மிகவும் மனக் கசப்படைந்திருக்கிறது.

கடைசி ஆள் உள்ள வரையில் போராடுவது என்று அறிவித்திருந்த பாகிஸ்தான் தளபதி நியாசி, இப்போது போர் நிறுத்தத்துக்கு வேண்டுகோள் விடுததிருப்பது, யாகியா கானின் கோரிக்கையின்மீதேதான் இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

நேற்று இராஜினாமா செய்த பாகிஸ்தான் அரசைச் சேர்ந்த அதிகாரிகள் இன்னமும் நடுநிலைப்பகுதியில் தஞ்சம் புகுந்தவண்ணம் இருக்கின்றனராம்.

தமிழகப் பொறியர்களின் அருஞ் சாதனை

இந்தியப் படை ஆறுகளைக் கடக்க உதவினர்

ஜலந்தர், டிச. 16—

சகர்கார் நகரை நோக்கிச் சென்ற இந்தியப் படையினர் 2 ஆறுகளைக் கடக்கவேண்டியிருந்தது.

இந்த 2 ஆறுகளையும் விரைவாகக் கடப்பதற்கு உதவியவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பொறியர்களேயாவர்; இவர்கள காலாட்படையுடன் போனவர்கள்.

இரண்டு ஆறுகளை டாங்கிகளும் மற்ற இராணுவ வாகனங்களும் கடப்பதற்கான தற்காலிகப் பாலங்களை விரைவில் அமைப்பதில் இவர்கள் தங்கள் திறனை மெய்ப்பித்தார்கள்.

பாதுகாப்பு நிதி

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர்கள் காணிக்கை

புதுடில்லி, டிச. 15—

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு நாடாளுமன்றத் தி. மு. க. உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தை வழங்குவதென்று முடிவு செய்துள்ளனர்.

நேற்று டில்லியில் நடைபெற்ற நாடாளுமன்ற தி. மு. க. கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவின்

இந்திய விரோதப் போக்கு— நாடாளுமன்றத் தி. மு. க. கண்டனம்

புதுடில்லி, டிச. 16—

இந்தியாவுக்கு எதிராகவும் — பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் செயல்படும அமெரிக்காவின் போக்கிற்கு, நேற்று நடந்த நாடாளுமன்ற தி. மு. க. கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஏழாவது கடற்படை அணியை இந்தியக் கடற்பகுதிக்கு அனுப்பியுள்ளது குறித்துக் கண்டனம் தெரிவிககப்பட்டது.

"இது சனநாயக விரோதச் செயல்மட்டுமல்ல — இந்தியாவுக்கு எதிரான செயலும் ஆகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது"

என்று கண்டனத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஏழாவது கடற்படைக்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ருல், இந்தியத் துருப்புகளுக்கும் — அமெரிக்கக் கடற்படைக்கும் இடையே மோதுதல் ஏற்பட்டுவிடக்கூடும்.

இந்தியா — முக்தி வாகினி படைகளால் சூழப்பட்டுத் தோல்வியடைவது நிச்சயமாகிவிட்டதால், அத்தகைய தப்பியோடும் தந்திரத்தை மேற்குப் பாகிஸ்தான் துருப்புக்கள் முயற்சிக்கக் கூடும்.

போர்க்களத்திலிருந்து பின்வாங்கும் மேற்குப் பாகிஸ்தான் துருப்புக்கள், 'குப்தா' துறையில் கூடுகின்றன — என்று இந்தியாவுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

'குப்தா' துறை என்பது, தப்பித்துக் கொண்டு செலவதற்குக் கடற்கரை ஒன்றுக்கு மேற்குப் பாகிஸ்தானின் இட்டுள்ள 'அடையாள'ச் சொல் ஆகும்.

"குப்தா துறை பற்றி எனக்குத் தெரியும்" என்று இந்தியத் தளபதி, பாகிஸ்தான் படைகளுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறர்.

62.50 கோடி மக்களுக்கு எதிராக நிக்சன்!

குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்படும் காலம் வரும்

நியூயார்க், டிச. 16—

அமெரிக்கா 7-வது கடற்படையின் 8 கப்பல்களும் வங்காள விரிகுடாவில் இருக்கின்றன.

வங்காள விரிகுடா என்பது, மலேயாவிலிருந்து இலங்கை வரையிலுள்ள கடற்பகுதியின் பெயராகும்.

மலேயாவுக்கும் — சிட்டகாங்குக்கும் இடையே உள்ள தூரம் 1,200 மைல்களாகும்.

'என்டர் பிரைஸ்' என்ற விமானம் தாங்கிக் கப்பலுடன் 'டிரிபோலி' என்ற தாக்கும் கப்பலும் இருக்கிறது; இந்தக் கப்பலில் 23 ஹெலிகாப்டர்கள் இருக்கின்றன.

இதைத் தவிர, நாசகாரிக் கப்பல்கள் — தரையில் இறங்கும் கப்பல்களும் இருக்கின்றன.

டாக்காவை நோக்கி...

இந்த எட்டுக் கப்பல்களும் டாக்காவை நோக்கி விரைந்துகொண்டிருக்கின்றன; இந்தக் கப்பல்களைப் போர்ப் பகுதிக்கு அனுப்புவதென்று நிக்சன் அரசாங்கம் முடிவு செய்தால், சனிக்கிழமைக்குள் இவைகள் வங்க தேசத்தின் தலைநகருக்கு வந்துவிடக்கூடும்.

"வியட்நாமில் வெற்றி பெற முடியாத நிக்சன் இப்போது ஏழரைக் கோடி வங்காளிகளையும் — 55 கோடி இந்தியர்களையும் எதிர்த்துக் கொள்ள விரும்புகிறரா? அமெரிக்கக் காங்கிரசு இதற்காக அவரைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தாதா?" என்றெல்லாம் ஐ. நா.-விலுள்ள இராஜதந்திரிகள் வினவியிருக்கின்றனர்.

எதிரியிடம் எஞ்சியுள்ள நீர்மூழ்கிகள்

இந்தியக் கப்பற்படை தேடுகிறது

பம்பாய், டிச. 16—

"ஏற்கனவே பாகிஸ்தான் கடற்படையின் நாசகாரிகளையெல்லாம் ஒழித்துக்கட்டிய இந்தியக் கடற்படை, இப்போது அதனிடம் எஞ்சியிருக்கும் நீர்மூழ்கிகளைக் கண்டுபிடித்து அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன"

என்று கடற்படைத் தளபதி அட்மிரல் நந்தா தெரிவித்திருக்கிறர்.

அமெரிக்க அதிகாரி இப்படிக் கூறுகிறர்

"'கிழக்கு வங்கத்தைப் பிரிக்க' நடைபெறும் முயற்சியை, இராணுவ பலத்தால் தடை செய்ய அமெரிக்கா விரும்பவில்லை"

என்று, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்காள விரிகுடாவுக்கு அமெரிக்கக் கடற்படை வந்திருப்பதையடுத்து இந்த உறுதி தரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18), அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.